# Kanchipuram District

## இரண்டாம் திருப்புதல் தேர்வு - 2024

### பன்னிரெண்டாம் வகுப்பு

பதிவு எண் :

### தமிழ்

நேரம் : 3.00 மணி பகுதி - 1 மதிப்பெண்கள் : 90

அனைத்து வினாக்களுக்கும் விடைதருக. 14 x 1 = 14

1. இலக்கியத்தையும் மொழியையும் ஒருசேர பேசுகின்ற இலக்கண நூல்
   அ) யாப்பருங்கலக்காரிகை ஆ) தண்டியலங்காரம்
   இ) தொல்காப்பியம் ஈ) நன்னூல்
2. வெள்ளச் சமவெளிகள் அழியக் காரணம்
   அ) பருவநிலைமாற்றம் ஆ) மணல் அள்ளுதல்
   இ) பாறைகள் இல்லாமை ஈ) நிலத்தடி நீர் உறிஞ்சப்படுதல்
3. சுரதா நடத்திய கவிதை இதழ்
   அ) இலக்கியம் ஆ) காவியம்
   இ) ஊர்வலம் ஈ) விண்மீன்
4. பொருத்துக.
   அ) உரிமைத் தாகம் - 1. பாரசீகக் கவிஞர்
   ஆ) அஞ்ஞாடி - 2. பூமணி
   இ) ஜலாலுத்தீன் ரூமி - 3. பக்தவச்சல பாரதி
   ஈ) தமிழர் குடும்ப முறை - 4. சாகித்தியஅகாதெமி
   அ) 2,4,3,1 ஆ) 3,4,1,2 இ) 2,4,1,3 ஈ) 2,3,4,1
5. "உவா உறவந்து கூடும் உடுபதி இரவி ஒத்தார்" - யார்? யார்?
   அ) சடாயு, இராமன் ஆ) இராமன், குகன்
   இ) இராமன், சுக்ரீவன் ஈ) இராமன், சபரி
6. "குழிமாற்று" எந்தத் துறையோடு தொடர்புடைய சொல்?
   அ) இலக்கியம் ஆ) கணிதம்
   இ) புவியியல் ஈ) வேளாண்மை
7. "விளியறி ஞமலி" - இதில் குறிப்பிடப்படும் விலங்கு யாது ?
   அ) எருது ஆ) குதிரை இ) நாய் ஈ) யாழி
8. முத்தமிழ் காப்பியம் எனப் போற்றப்படும் நூல்
   அ) சிலப்பதிகாரம் ஆ) கம்பராமாயணம்
   இ) வளையாபதி ஈ) மணிமேகலை
9. பொய்யா வானம் - இலக்கணக்குறிப்பு
   அ) வினைத்தொகை ஆ) உரிச்சொற்றொடர்
   இ) பண்புத்தொகை ஈ) ஈறுகெட்ட எதிர்மறை பெயரெச்சம்
10. இலக்கியத்தில் மேலாண்மை என்ற நூலை எழுதியவர்
    அ) வெ.இறையன்பு ஆ) சேதுராமன்
    இ) சாமிநாதர் ஈ) விந்தன்

Padasalai.Net

www.Padasalai.Net www.TrbTnpsc.com



11. Arrival - என்பதன் தமிழ்ச்சொல்

அ) வருகை ஆ) புறப்பாடு

இ) வானூர்தி ஈ) நவீனத் தொடர்வண்டி

12. மயிலை. சீனி.வேங்கடசாமி எழுதிய முதல் நூல்

அ) கிறித்துவமும் தமிழும் ஆ) தமிழ்நாட்டு வரலாறு

இ) களப்பிரர் ஆட்சியில் தமிழகம் ஈ) கொங்குநாட்டு வரலாறு

13. மயிலுக்குப் போர்வை தந்தவன்

அ) பேகன் ஆ) பாரி இ) அதியமான் ஈ) ஓரி

14. சமாதானத்தின் குறியீடு

அ) விளக்கு ஆ) தராசு இ) சங்கம் ஈ) வெண்புறா

பகுதி- 2

பிரிவு- 1

எவையேனும் மூன்றனுக்கு இரண்டு அல்லது மூன்று வரிகளில் விடை தருக. 3x2=6

15. புக்கில் தன்மனை - சிறுகுறிப்பு எழுதுக.

16. கவிஞர் சிற்பி எவற்றை வியந்து பாட, தமிழின் துணை வேண்டும் என்கிறார்?

17. நிலையாமை குறித்து சவரி உரைக்கும் கருத்து யாது?

18. எண்வகை மெய்ப்பாடுகள் யாவை?

பிரிவு-2

எவையேனும் இரண்டனுக்கு இரண்டு அல்லது மூன்று வரிகளில் விடை தருக. 2x2=4

19. குடும்பம் என்னும் அமைப்பு ஏற்படுவதற்கு அடிப்படையாக இருப்பது எது?

20. அக்காலத்துக் கல்வி முறையில் மனனப் பயிற்சிக்கு உதவிய நூல்கள் யாவை?

21. காட்சி மறைவு என்றால் என்ன?

பிரிவு-3

எவையேனும் ஏழனுக்கு விடை தருக. 7x2=14

22. *உவமைத் தொடரை சொற்றொடரில் அமைத்து எழுதுக.*

தாமரை இலை நீர்போல

23. *தொகைச் சொற்களை விரித்து எழுதுக.*

முத்தமிழ்

24. *பிழை நீக்கி எழுதுக.*

ஐப்பசி அடமழையில், ஊருணி நிறைந்தது

25. *மயங்கொலிச் சொற்களை ஒரே தொடரில் அமைத்து எழுதுக.*

தழை, தலை, தளை

26. *ஏதேனும் ஒன்றனுக்கு மட்டும் பகுபத உறுப்பிலக்கணம் தருக.*

அ) சாய்ப்பான் ஆ) செய்த

27. *ஏதேனும் ஒன்றனுக்கு புணர்ச்சி விதி தருக.*

அ) செம்பரிதி ஆ) ஒருமையுடன்

28. *ஏதேனும் ஒன்றனுக்கு இலக்கணக் குறிப்பு தருக.*

அ) மலரடி ஆ) வளர் நலம்

Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com

29. *பேச்சு வழக்கை எழுத்து வழக்காக மாற்றுக.*
புள்ளைக்கு உடம்பு சரியில்லை மூணு நாளா சிரமப்படுது.

30. *வல்லின மெய்கள் இட்டும் நீக்கியும் எழுதுக.*
இந்த ஓவியத்தில் அமைந்த வண்ண செறிவும், ஓவிய பொலிவும் நம்மை கவர்கின்றன.

பகுதி-3

பிரிவு- 1

எவையேனும் இரண்டனுக்கு மட்டும் ஐந்து அல்லது ஆறு வரிகளில் விடை தருக. 2x4=8

31. தன்னேர் இலாத தமிழ் - இடஞ்சுட்டிப் பொருள் விளக்குக.

32. சடாயுவைத் தந்தையாக ஏற்று, இராமன் ஆற்றிய கடமையை எழுதுக.

33. வள்ளலார் கந்த கோட்டத்து இறைவனிடம் வேண்டுவதை தெய்வமணி மாலை பாடல் வழி விளக்குக.

34. நாட்டிய அரங்கின் அமைப்பை இளங்கோவடிகள் காட்சிப்படுத்தும் பாங்கு குறித்து உங்கள் கருத்தை எழுதுக.

பிரிவு- 2

எவையேனும் இரண்டனுக்கு மட்டும் ஐந்து அல்லது ஆறு வரிகளில் விடை தருக. 2x4=8

35. பேரிடர் மேலாண்மை ஆணையம் - விளக்கம் தருக.

36. இன்றைய கூட்டுக் குடும்பம், பண்டைய விரிந்த குடும்பத்தின் தொடர்ச்சியே - விளக்குக.

37. நீங்கள் ஆசிரியரனால் மாணாக்கரை அன்பினால் எவ்வகையில் நெறிப்படுத்துவீர்கள்?

38. உழவுத் தொழிலில் மேலாண்மை குறித்து நீவிர் அறிந்தனவற்றை எழுதுக.

பிரிவு-3

எவையேனும் மூன்றனுக்கு மட்டும் விடை தருக. 3x4=12

39. "சினம் என்னும் சேர்ந்தாரைக் கொல்லி இனம் என்னும்
ஏமப் புணையைச் சுடும்" - குறட்பாவில் பயின்று வரும் அணியை விளக்குக.

*(அல்லது)*

உவமை அணியைச் சான்று தந்து விளக்குக.

40. *கீழ்க்காணும் பழமொழிகளில் ஏதேனும் ஒன்றினை வாழ்க்கை நிகழ்வோடு பொருத்தி எழுதுக.*
அ) தன்கையே தனக்குதவி
ஆ) சிறுதுளி பெருவெள்ளம்

41. *இலக்கிய நயம் பாராட்டுக: (மையக்கருத்தை எழுதி ஏதேனும் மூன்று நயங்களை எழுதுக)*

பிறப்பினால் எவர்க்கும் - உலகில்
　　பெருமை வாராதப்பா
சிறப்பு வேண்டுமெனில் - நல்ல
　　செய்கை வேண்டுமப்பா
நன்மை செய்பவரே - உலகம்
　　நாடும் மேற்கலத்தார்
தின்மை செய்பவரே- அண்டித்
　　தீண்ட ஒண்ணாதார்

*- கவிமணி தேசிக விநாயகம்.*

www.Padasalai.Net www.TrbTnpsc.com



42. தமிழாக்கம் தருக.

அ) A crying child will get milk.

ஆ) Health is wealth.

இ) No pain no gain

ஈ) Practice makes one perfect

43. கடல் அல்லது கல்வி என்னும் தலைப்பில் மரபு, புதுக்கவிதை ஒன்றை எட்டு வரிகளுக்குக் குறையாமல் எழுதுக.

பகுதி-4

பின்வரும் வினாக்களுக்கு இரு பக்கங்களுக்கு மிகாமல் விடை தருக. 3 x 6 = 18

44. அ) பண்பின் படிமமாகப் படைக்கப்பட்ட இராமன் பிற உயிர்களுடன் கொண்டிருந்த உறவு நிலையைப் பாடப்பகுதி வழி நிறுவுக.

*(அல்லது)*

ஆ) எச்.ஏ.கிருட்டிணனார் "கிறித்தவக் கம்பரே" என்பதை நும் பாடப்பகுதி வழி நிறுவுக.

45. அ) கவிதையின் நடையைக் கட்டமைக்கும் அழகியல் கூறுகளை எடுத்துக்காட்டி விளக்குக.

*(அல்லது)*

ஆ) "நிர்வாக மேலாண்மை" குறித்து வெ.இறையன்பு கூறும் கருத்துகளைத் தொகுத்து எழுதுக.

46. அ) "உரிமைத்தாகம்" என்னும் கதையில் சகோதரர்கள் இருவரும் ஒன்றிணையாமல் இருந்திருந்தால் .........

கதையைத் தொடர்ந்து எழுதி முடிக்க.

*(அல்லது)*

ஆ) மகாநடிகரைக் கண்ட பாலச்சந்திரனின் மனவோட்டத்தை நயத்துடன் எழுதுக.

பகுதி-5

அடிமாறாமல் செய்யுள் வடிவில் எழுதுக. 4 + 2 = 6

47. அ) "காய்நெல் அறுத்துக்" எனத் தொடங்கும் புறநானூறு.

ஆ) "அரிது" என முடியும் திருக்குறள்.

******

Padasalai.Net

Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com